# வருமான வரித் துறை கூட்டுறவு சங்கம் லிட்.,

(பதிவு எண் : MSCS/CR-11/90)

121, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600034.

<u>சுற்றறிக்கை</u>

தேதி: 19.06.2019

அன்பான உறுப்பினர்கள் அனைவருக்கும் முதலில் இயக்குனர் குழுமத்தின் சார்பாக பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூற்றாண்டை நோக்கி வேகமாக வளர்ந்து வரும் நமது கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சியில் நாம் இப்போது ஒரு முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறோம்.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட அவசரச்சட்டம் மற்றும் பன்மாநில கூட்டுறவு சங்க சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் காரணமாக கூட்டுறவு சங்கங்கள் ஓட்டுரிமை இல்லாத உறுப்பினர்களிடம் (B பிரிவு உறுப்பினர்கள்) இருந்து வைப்புத்தொகை பெறுவது நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், அவர்களிடம் இருந்து ஏற்கனவே பெறப்பட்ட வைப்புத்தொகைகளும் முதிர்வடையும்போது திரும்ப வழங்கப்படுகின்றன. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள சிறிய அளவிலான நிதி நெருக்கடி இன்னும் சில மாதங்களுக்கு இருக்கலாம். அதனால், இயக்குநர் குழுமம் சில முடிவுகளை எடுத்துள்ளது. இதன்படி,

1. மெகா லோன் (வீட்டுக்கடன்) வழங்குவது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.
2. உயர்கல்விக்கடன், வறட்சி நிவாரணக்கடன் மற்றும் பண்டிகைக் கால கடன் வழங்குவது வரும் ஜூலை 1 முதல் நிறுத்தப்படுகிறது.
3. புதிய உறுப்பினர்களுக்கு (சங்கத்தில் சேர்ந்த முதல் ஒரு வருடம் வரையிலும்) அதிகபட்சமாக ரூபாய் ஐம்பதாயிரம் வரையிலுமே சாதாரணக்கடன் வழங்கப்படும். ஏற்கனவே (ஒரு வருடத்திற்கும் மேலாக) உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு அதிகபட்சமாக ரூ. 1 லட்சம் வரையிலும் சாதாரணக்கடன் வழங்கப்படும்.

உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க பணிவுடன் வேண்டுகிறோம்.

இந்த நிலையை மாற்றிட நம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

1. ஏப்ரல் 2019 முதல் உறுப்பினர்கள் அனைவருக்கும் மாதம் தோறும் ரூ.500 சிக்கன வைப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.
   சிக்கன வைப்பினை மேலும் அதிகரிக்க விரும்பும் உறுப்பினர்கள் சங்கத்தில் தொடர்புகொண்டு இதற்கான படிவம் பெற்று பூர்த்தி செய்து தருவதன் மூலம் அதிகரித்துக்கொள்ளலாம் (இத்தொகைக்கு ஆண்டுக்கு 8.5 % என்ற விகிதத்தில் வட்டி வழங்கப்படுகிறது).
2. நிரந்தர வைப்புத்தொகைக்கான வட்டி விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.
   ஒரு ஆண்டு வைப்புத்தொகை 8 %
   இரு ஆண்டு வைப்புத்தொகை 8.25 %
   மூன்று ஆண்டு வைப்புத்தொகை 8.75 %
   உறுப்பினர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி அதிக முதலீடு செய்ய வேண்டுகிறோம்.
3. ஆண்டுக்கு 8.75% ,என்ற அதிகபட்ச வட்டி விகிதத்தில் 35 மாதங்களில் முதிர்வடையும் வகையில், **சிறப்புத் தொடர் வைப்புத்திட்டம்** ஒன்று ஜூலை 1 முதல் தொடங்கப்படுகிறது. இதன் விபரம் பின்வருமாறு:
4. 

| **மாதத் தவணை (ரூ.)** | **முதிர்வுத்தொகை** |
|---|---|
| 10,000 | 4,00,000 |
| 5,000 | 2,00,000 |
| 2,500 | 1,00,000 |
| 1,250 | 50,000 |

மேலும் விவரங்களை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் 26.06.2019 அன்று மதிய உணவு இடைவேளையில் நமது வருமானவரி கலையரங்கத்தில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

உறுப்பினர்கள் தாங்கள் வாங்கிய கடனுக்கான தவணைத்தொகையை அதிகரித்தும், கடனை முன்னதாகத் திருப்பிச் செலுத்தியும் சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவலாம்.

இது ஒரு தற்காலிக சூழ்நிலையே. நாம் ஒவ்வொருவரும் நம்மாலான சிறு முயற்சியினை மேற்கொண்டோமானால். இந்த சிறிய பின்னடைவினை எளிதில் கடந்து பாரம்பரியமிக்க நமது கூட்டுறவு சங்கத்தின் மேன்மையைப் போற்றி பாதுகாக்கலம்.

நம்பிக்கையுடன்,

M. Veerabagu

ம. வீரபாகு,

தலைவர்.